பட்டும் பாசனத்திற்காக வாய்க்கால் வெட்டும் பணி இன்னும் ஆரம்பிக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) எப்போது வெட்ட ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) ஆம்.

(ஆ) மேற்படி ஏரியும், வாய்க்கால் 50 ஏக்கர் நிலம் பாசனம் வரை வெட்டப்படும் பணியும் வறட்சி மீட்புப் பணித் திட்டத்தின் கீழ் வெட்டப்பட்டுள்ளது. தற்பொழுது பாசன நிலம் 25 ஏக்கர் வரை வாய்க்கால் வெட்டலாம் என்ற அரசு ஆணைப்படி, மேற்படி கால்வாய் மேலும் 25 ஏக்கர் பாசனம் வரை வெட்டப்படும் என்றும் அதற்கான ஆரம்ப ஆய்வுகள் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு விட்டன என்றும் சிறு பாசன தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

தம்பிக்கோட்டையில் பட்டா செய்து கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கும் திட்டம்.

*வினா எண் 866—திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை வட்டம், தம்பிக்கோட்டையில் பர்மா தமிழர்களுக்கும் ஏழை மக்களுக்கும் பட்டா கொடுக்கப் பட்ட நிலங்களுக்கு பாசன வசதி கோரி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மற்றும் (ஆ) : இதுபற்றிய கோரிக்கையின் அடிப்படையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு புனரமைப்பு இயக்குநரின் ஒப்புதலைப் பெறுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் ஒப்புதல் கிடைத்தவுடன் தேவை யான மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்.

1981 ஏப்ரல் 24]

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்மா தமிழர்களுக்கும், மற்ற ஏழைகளுக்கும் பட்டுக்கோட்டையில் பட்டா கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு பாசன வசதி கேட்டிருக்கிறார்கள். இதைப்போல மற்ற இடங்களில் எங்காவது கேட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற குறிப்பின் படி தம்பிக்கோட்டையில் இருக்கிற பர்மா தமிழர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற நிலங்களுக்கு பாசனவசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கொள்கை அளவிலே பாசனத்துறை கொடுக்கலாம் என்று தெரிவித்து இருக்கிறது. அதற்கான ஒரு திட்டத்தைக் கூட தயாரித்திருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கை கிடைத்தவுடனே அங்கே அதை செய்யவிருக்கிறோம். இதுபோல் வேறு பகுதிகளில் அவர்களுக்கு அது தேவையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏனாதி, தேளி கிராமங்களுக்கு பாசன வசதியளிக்கும் திட்டம்.

* வினா எண் 867—திரு. க. பரமலை : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரைத் தொகுதியில் ஏனாதி, தேளி போன்ற கிராமங்களுக்கு வைகை நீர்ப்பாசன வசதி கிடைக்காததால் பெரியாறு நீர்ப்பாசன வரம்பிற்குள் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : உலக வங்கி தீர்வாங்க அறிக்கையின்படி (World Bank Appraisal report) பெரியாறு-வைகை பாசனத்தை நவீனப்படுத்தும் திட்டத்தில் விரிவாக்கப் பகுதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட பகுதியில், ஏனாதி மற்றும் தேளி கிராமங்கள் இல்லை.

திரு. க. பரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்த கேள்வி போட்டதற்குப் பின்னாலே, ஒரு துணைக் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்